முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.6.2023) தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடியில் உள்ள முதலை முத்துவாரி வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டு தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பழனிமாணிக்கம், ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!... முதல் பக்கத் தொடர்ச்சி

தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடி கிராமத்திலுள்ள முதலைமுத்துவாரி வடிகால் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் 3.50 கி.மீ. தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இத்தூர்வாரும் பணி மேற்கொள்வதால் சென்னம்பட்டி, குருவாடிப்பட்டி மற்றும் நாட்டாணி கிராமங்களில் மழையினால் ஏற்படும் வெள்ள சேதங்கள் தடுக்கப்படுவதோடு வண்ணாரப்பேட்டை கிராமத்திலுள்ள சுமார் 2,042 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும் தஞ்சாவூர் மாவட்டம் விண்ணமங்கலத்தில் உள்ள "இ" பிரிவு வாய்க்காலின் வேளாண்பொறியியல் துறை மூலம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 2.50 கி.மீட்டர் தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதால் பூதராயநல்லூர், விண்ணமங்கலம், தீச்சசமுத்திரம் மற்றும் வெங்கடசமுத்திரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 450 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் உள்ள கூழையாறு வடிகால் மற்றும் ஆலத்தூர் மற்றும் இலால்குடி வட்டத்தில் உள்ள இருதயபுரம் மற்றும் வெள்ளனூரில் நந்தியாறு வடிகாலில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள கூழையாற்றில் ரூ.194.80 இலட்சம் மதிப்பீட்டில் 7.79 கி.மீ தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் ஆய்வு செய்தார். இவ்வடிகால் தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதால் மேட்டுப்பட்டி, திண்ணியம், செங்கரையூர் மற்றும் டி.கல்விக்குடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நிலங்கள் வெள்ளப் பாதிப்பில் இருந்து தடுக்கப்படும்.

தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆலத்தூர் மற்றும் இலால்குடி வட்டங்களில் அமைந்துள்ள இருதயபுரம் மற்றும் வெள்ளனூர் கிராமங்களில் நந்தியாற்றின் நீரோட்ட பாதையில் உள்ள முட்செடிகளை முழுவதுமாக அகற்றி அதனை 5.90 கி.மீ. நீளம் தூர்வாரி இரு பக்கக் கரைகளையும் பலப்படுத்திட ரூ.194.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகளை முதலமைச்சர் ஆய்வு செய்தார். இதன் மூலம், ஊட்டத்தூர், நம்புக்குறிச்சி, பெருவளப்பூர், காணக்கிளிய நல்லூர், வந்தலை கூடலூர், சங்கேந்தி மற்றும் வெள்ளனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5777 ஏக்கர் பாசனப் பரப்புகள் வெள்ள பாதிப்பிலிருந்து தடுக்கப்படும்.

இந்த தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டால், மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன வாய்க்கால்களில் உரிய நேரத்தில் கடைமடை வரை தங்குதடையின்றி சென்றடையவும் மற்றும் வெள்ளக்காலங்களில் விரை வில் தண்ணீர் வடியவும் ஏதுவாக இருக்கும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்த இடங்களில் விவசாயப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், கோரிக்கை மனுக்களை அளித்து தங்களது தேவைகளையும் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பழனிமாணிக்கம், ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், எ.சௌந்திர பாண்டியன், என்.தியாகராஜன், எஸ்.ஸ்டாலின் குமார், ஜவாஹிருல்லா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் சந்தீப் சக்ஷேனா, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வீடுகளுக்கான மின்கட்டணம் உயர்த்தப்படாது!

அரசின் இலவச மின்சாரத் திட்டங்கள் தொடரும்!

திருச்சி பேட்டியில் முதல்வர் உறுதி!... முதல் பக்கத் தொடர்ச்சி

அதேபோல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலமாக, 27 கோடியே 17 இலட்சம் கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 433 கிலோமீட்டர் நீளமுள்ள சிறிய கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 25 எண்ணிக்கையிலான குளம், குட்டை போன்ற நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டும் மேட்டூர் அணை திறக்கப்படுவதற்கான குறிப்பிட்ட தேதியான ஜூன் 12-ஆம் நாள் அன்று நான் மேட்டூர் சென்று அணையை டெல்டா பாசனத்திற்காக திறந்து வைக்க இருக்கிறேன்.

சென்ற ஆண்டுகளில் நாம் சாதித்துக் காட்டியது போலவே, மேட்டூர் அணையின் நீர் காவிரி டெல்டா பகுதிக்கு வருவதற்கு முன்னதாகவே நான் ஏற்கெனவே உங்களிடம் கூறியபடி அனைத்து தூர்வாரும் பணிகளும் சிறப்பாக முடிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல் உற்பத்தியில் புதியதோர் சாதனை!

கடந்த இரண்டு ஆண்டுகளைப் போல இந்த ஆண்டும் டெல்டா உழவர்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நெல் உற்பத்தியில் புதியதோர் சாதனை படைப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கழக ஆட்சியில் வேளாண் உற்பத்தி அதிகம் ஆகி இருக்கிறது. பாசனப் பரப்பு அதிகம் ஆகி இருக்கிறது. இவை அனைத்தும் வேளாண் துறையில் மாபெரும் புரட்சியைக் காட்டுகிறது. தூர்வாரும் பணியை தொடர்ச்சியாகச் செய்து மண்ணையும் மக்களையும் காப்போம் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி: *கர்நாடகாவில் புதிதாக அமைந்த அரசு, மேகதாது அணை கட்டியே தீருவோம் என்ற முனைப்பில் இருக்கிறார்கள், இது சம்பந்தமாக நீங்கள் அந்த முதலமைச்சருடன் பேசி சுமுக தீர்வு காண்பதற்கு முயற்சி செய்கிறீர்களா?*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: புதிதாக வந்திருக்கிற காங்கிரஸ் தலைமையில் இருக்கின்ற ஆட்சி மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த ஆட்சிகளும் இதையேதான் தொடர்ந்து திரும்பத் திரும்ப மேகதாது அணையை கட்டுவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்போதும் நாம் எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம். அதே நிலையில் தான் எங்கள் ஆட்சி இன்றைக்கு இருக்கிறது. அதனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் கலைஞர் அவர்கள் எப்படி அதில் உறுதியாக இருந்தாரோ, அதே உறுதியோடு இந்த ஆட்சி நிச்சயமாக இருக்கும். அதில் எந்தவிதமான சந்தேகமும் பட வேண்டாம்.

கேள்வி: *காப்பீடு திட்டத்தை அரசே நடத்த வேண்டும் என்று உழவர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள், ஏனென்றால் காப்பீடு திட்டத்தில் முறையாகக் கிடைப்பது இல்லை, நிறைய பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்கிறார்களே?*

முதலமைச்சர்: ஆய்வில் இருக்கிறது. ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

கேள்வி: *நூறு நாள் வேலைத் திட்டப் பணியாளர்களைச் சந்தித்தீர்கள், அவர்கள் என்ன கோரிக்கை வைத்தார்கள்? வேளாண் பணிகளை நூறு நாள் திட்டத்தில் கொண்டுவர வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கைகள் இருக்கிறது...*

முதலமைச்சர்: அந்த மாதிரி கோரிக்கை எதுவும் இன்று அவர்கள் வைக்கவில்லை. அவர்கள் கொடுக்கும் ஊதியத்தை முறையாகக் கொடுக்க வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தார்கள். அது முறையாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. எங்கெல்லாம் புகார் இருக்கிறதோ, அது குறித்து விசாரிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

கேள்வி: *பத்திரிகையாளர் நல வாரியத் திட்டத்தின்கீழ் மதுரையிலும் திருச்சியிலும் விலை கொடுத்து வாங்கிய பட்டா நிலம் இப்போது இல்லையென்று தகவல் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக என்ன செய்யப் போகிறீர்கள்?*

முதலமைச்சர்: அதை மறுபரிசீலனை செய்து கொடுப்பதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

கேள்வி: *கவர்னர் இன்னும் பல மசோதாக்களுக்கு அனுமதி கொடுக்காமலே இருக்கிறார், இது சம்பந்தமாக தெலுங்கானா அரசுகூட கவர்னரை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றார்கள். அதுபோன்று ஏதாவது ...*

முதலமைச்சர்: நாங்களும் நீதிமன்றத்தை நாடலாமா என்று சட்ட வல்லுநர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

கேள்வி: *கவர்னரை மாற்றுவதற்கு ஏதாவது கோரிக்கை வைப்பீர்களா?*

முதலமைச்சர்: நாங்கள் நினைப்பது எல்லாம் நடந்தால் இந்தப் பிரச்சினையே இல்லை.

பல்கலைக் கழகத்திற்கு தமிழினத் தலைவர் கலைஞர் பெயர்!

கேள்வி: *கலைஞருடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை பல்கலைக்கழகத்திற்கு கலைஞர் அவர்களின் பெயர் சூட்டப்படுமா?*

முதலமைச்சர்: நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும். இருக்கிற பல்கலைக்கழகத்திற்கு வைக்கலாமா அல்லது புதிதாக உருவாக்கப் படக்கூடிய பல்கலைக்கழகத்திற்கு வைக்கலாமா என்பதை நாங்கள் பரிசீலித்து முடிவு செய்வோம்.

கேள்வி: *தமிழ்நாட்டில் முக்கியமான பல்கலைக்கழகங்களில் 2 வருடங்களாக பட்டம் தராமல் இருக்கிறார்கள், அதற்கு முக்கியக் காரணம் கவர்னர்தான் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதே?*

> வீட்டு இணைப்பிற்கு எந்தவிதமான கட்டண உயர்வும் கிடையாது, அனைத்து இலவச இணைப்புகளும் தொடரும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதேபோல வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள் வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என்பதும் தொடரும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு அளிக்கப்படக்கூடிய இலவச மின்சாரச் சலுகைகளும் அப்படியே தொடரப் போகிறது. அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

முதலமைச்சர்: ஏற்கனவே உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார், நானும் அதனை அழுத்தமாகச் சொல்கிறேன். உண்மைதான் அது.

கேள்வி: *விரைவாக அவர்கள் பட்டம் பெற நமது அரசு சார்பில் ஏதாவது முயற்சி செய்யப்படுமா ?*

முதலமைச்சர்: அதற்குதான் பல்கலைக்கழகத்தில் வேந்தர்களாக முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று நாங்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கிறோம்.

கேள்வி: *டாஸ்மாக் கடைகளை குறைக்கும் எண்ணம் ஏதும் இருக்கிறதா?*

முதலமைச்சர்: ஏற்கனவே சொல்லியிருக்கிறோமே. இந்த ஆண்டு 500 கடைகளை குறைப்பதாக அறிவித்திருக்கிறோம்.

கேள்வி: *அமைச்சரவையில் மாற்றம் இருக்க வாய்ப்பிருக்கிறதா?*

முதலமைச்சர்: இப்போது வந்த செய்தியைப் பார்த்தீர்களென்றால், ஒன்றியத்தில் தான் அமைச்சரவை மாற்றம் வரும் என்று செய்தி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: *நீர்நிலைகளை நன்றாகத் தூர்வாரியிருக்கிறீர்கள், சில இடங்களில் கழிவு கலக்கிறது, அவற்றைச் சுத்தம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா?*

முதலமைச்சர்: அதையும் கூடுமானவரை முயற்சி செய்து தடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏதேனும் புகார் இருந்தால் சொல்லுங்கள், அதையும் கவனிக்கிறோம்.

கேள்வி: *வணிக (Commercial) மின்கட்டணம் உயர்வினால் வணிகம் பாதிக்கப்படும் என்று ஒரு கருத்து இருக்கிறது, அதைக் குறைப்பதற்கு ...*

முதலமைச்சர்: அதுவும் ஒரே ஒரு பத்திரிகையில்தான் அதைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் அதைப் புரிந்து கொண்டார்கள். திட்டமிட்டு ஒரு பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. வீட்டு இணைப்பைப் பொறுத்தவரை, அவர்களுக்கு மின்கட்டணத்தை எந்தக் காரணம் கொண்டும் உயர்த்த மாட்டோம் என்று உறுதியாகச் சொல்லிவிட்டோம். ஆனாலும் ஏற்கனவே அதே அறிவிக்கைதான் வந்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும், பார்த்திருப்பீர்கள். புள்ளிவிவரத்துடன் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

வீட்டு இணைப்பிற்கு எந்தவிதமான கட்டண உயர்வும் கிடையாது, அனைத்து இலவச இணைப்புகளும் தொடரும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதேபோல வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள் வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என்பதும் தொடரும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு அளிக்கப்படக்கூடிய இலவச மின்சாரச் சலுகைகளும் அப்படியே தொடரப் போகிறது. அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

ஒன்றிய அரசின் விதிமுறைப்படி பார்த்தீர்கள் என்றால், 4.7 விழுக்காடு கட்டணம் அதிகரிக்க வேண்டும். ஆனால், 2.18 விழுக்காடாக அதனைக் குறைத்து அந்தத் தொகையையும் மானியமாக தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு மின்வாரியத்திற்குத் தருவதற்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே வீட்டு இணைப்புகளைப் பொறுத்தவரைக்கும் எந்தவிதமான கட்டண உயர்வும் நிச்சயமாக இருக்காது.

வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் அதுவும் 13 பைசா விலிருந்து 21 பைசா வரை உயர்வு இருக்கும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. மற்ற மாநிலங்களில் பார்த்தீர்கள் என்றால், இதை விட அதிகம். அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது பார்த்தீர்கள் என்றால், மின் கட்டணத்தை செங்குத்தாக உயர்த்தினார்கள். மின்வாரியத்தை கடனில் மூழ்கடித்துவிட்டு போய்விட்டார்கள்.

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது, உதய் (UDAY) திட்டத்தில் கையெழுத்திட்டது அ.தி.மு.க. ஆட்சி. அதனால்தான், இந்தக் கோளாறு எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

கேள்வி : *அமுல் நிறுவனம் தமிழ்நாட்டில் வருவதை தடுப்பதாகச் சொன்னீர்கள். அது பற்றி தங்கள் கருத்து.. .*

முதலமைச்சர்: அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

கேள்வி : ஆவின் பாலில் கலப்படம் செய்கிறார்கள் என்று கூறுகிறார்களே?

முதலமைச்சர்: அது தவறான செய்தி. அன்றைக்கே அந்தத் துறையினுடைய அமைச்சர் மறுத்துவிட்டார். திட்டமிட்டு பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆதாரத்தை போலியாகத் தயார் செய்து போடுகிறார்களே தவிர, அது உண்மை இல்லை.

கேள்வி : *நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய ஆயத்தப் பணிகளைத் தொடங்கி விட்டீர்களா? புதிதாக ஏதாவது கூட்டணிக் கட்சிகள். நீங்கள் அதில் கலந்து கொள்ளப் போகிறீர்களா?*

முதலமைச்சர்: நான் தலைவருடைய நூற்றாண்டு விழாவில் தெளிவாக பேசியிருந்தேன். வருகிற 23-ஆம் தேதி பீகார் மாநிலத்தினுடைய முதலமைச்சர் நிதீஷ்குமார் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார், அதில் முடிவெடுக்கப்படும். நான் அதில் கலந்து கொள்ளப்போகிறேன்.

கேள்வி : *மூன்று மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்தது ஒன்றிய அரசின் தலையீட்டினால்தான் ஆனது என்று அது பற்றி....*

முதலமைச்சர்: அதற்குரிய விளக்கத்தைச் சொல்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை டெல்லிக்கு அனுப்பி விளக்கம் சொல்லி, இப்போது மறுபடியும் மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

தமிழ்நாடு அரசு
திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சி
ந.க.எண்.495 / 2022/ அ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்.05.06.2023

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டுக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் Construction of LPG Gasifier Cremetorium at Ward No.1, Survey No.242 in Thirumazhisai Town Panchayat பணிக்கு கீழ்கண்ட விவரப்படி மூடி முத்திரையிடப்பட்ட Two Cover Systems 1)Technical Bid, 2)Price Bid ஒரே உறையில் சீலிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.00 மணி வரையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை அலுவலக நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 1.00 மணி வரையில் உரியக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது https://tntenders.gov.in இணையதளத்தில் பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளியினை 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பதிவேற்றம் செய்யலாம்.

வ. எண்	பணியின் பெயர்	எண்ணிக்கை	மதிப்பீடு தொகை (ரூபாய்)	டேவணித் தொகை 1 %	ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம்	பணி முடிக்க வேண்டிய காலம்
1.	Construction of LPG Gasifier Cremetorium at Ward No.1, Survey No.242 in Thirumazhisai Town Panchayat under KNMT" Scheme 2022-2023 பணி	1	1,50,00,000	1,50,000	21240	360 நாட்கள்

இதர நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் வேலை நாட்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 2913 / ஒப்பந்தப்புள்ளி /2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" செயல் அலுவலர், திருமழிசை பேரூராட்சி திருவள்ளூர் மாவட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/1903/2023 மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிகளுக்கு மறு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது
நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) 2023-24

பணியின் விவரம்	சிப்பங்களின் எண்ணிக்கை	பணியின் மதிப்பு தோராயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
மண்டலம் - 8 & 9ல் உள்ள 22 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme 2023-24	1	169.00	169000	முதல் வகுப்பு

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.06.2023 மாலை 3.30 மணி
செ.ம.தொ.இ / 2941 / ஒப்பந்தப்புள்ளி / 2023 மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/2753/2023 மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது
நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (2023-24)

பணியின் விவரம்	சிப்பம்	பணியின் மதிப்பு தோராயமாக 18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
மண்டலம் - 2, 4, 5, 8, 11, 13, 14 & 15ல் உள்ள 309 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (2023-24)	1 முதல் 33 வரை	குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.78.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.134.00 இலட்சங்கள்	பணியின் மதிப்பில் 1 சதவீதம்	முதல் வகுப்பு

1. ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 27.06.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
3. இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2944 / ஒப்பந்தப்புள்ளி / 2023 மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/2754/2022 மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது
நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT 2023 -24)

பணியின் விவரம்	சிப்பம்	பணியின் மதிப்பு தோராயமாக GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில்	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
மண்டலம் 1, 2, 3, 4, 11, 13 மற்றும் 14ல் உள்ள 124 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் இன்டர்லாக் பேவர் பிளாக் அமைக்கும் பணி (சிப்பம் 1 முதல் 7 வரை) நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT 2023-24)	1 முதல் 7 வரை	குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.39.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.71.00 இலட்சங்கள்	பணியின் மதிப்பில் 1 சதவீதம்	இரண்டாம் வகுப்பு

1. ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 27.06.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
3. இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2943 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தென்மேற்குப் பருவமழை முன்னேற்பாடு நடவடிக்கைகள்!

தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஆலோசனை!

சென்னை, ஜூன் 10 -

தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து தலைமைச்செயலாளர் இறையன்பு ஆலோசனை நடத்தினார்.

மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டியுள்ள மாவட்டங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள், தென் மண்டல வானிலை ஆய்வு மைய தலைவர் பாலசந்தர் ஆகியோர் பங்கேற்றனர்.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டிய தமிழக மாவட்டங்களிலும் தாக்கம் இருக்கும் என தகவல் தெரிவித்தார்.

தென்மேற்கு முன்னேற்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் ஒரு ஆலோசனை நடைபெற்றது. தென்மேற்கு பருவமழை கேரளா பகுதியில் தற்போது தொடங்கியிருக்கக்கூடிய நிலையில் தென்கிழக்கு பகுதி யிலும் தொடங்கருக்கிறது. தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் இறையன்பு தலைமையில் வருவாய் மற்றும் போரிடர் மேலாண்மைத்துறை அதிகாரிகள், மற்றும் காவல்துறை அதிகாரிகள் முன்னிலையில் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பருவமழையின் போது ஏற்படக் கூடிய பாதிப்புகளை தடுக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து இந்த கூட்டத்தில் விவரிக்கப்பட்டது.

மேலும் மீட்பு பணிகளுக்குத் தேவையான சாதனங்கள் மாற்று இயந்திரம், வாகனங்கள், மோட்டார் படகுகள், உயர் மின் விளக்குகள், மோட்டார் பம்ப் செட், டீசல், மின்னியற்றி, மணல் மூட்டைகள் ஆகியவற்றை தேவைக்காக தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும் இந்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.